


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## செப்டம்பர் - 2019

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## செப்டம்பர் - 14.09.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- பொருளாதார செய்திகள்
- விளையாட்டு செய்திகள்







## தமிழக நிகழ்வுகள்

- **சர்வதேச உயிரியல் பூங்கா சங்கத்தில் வண்டலூர் பூங்காவுக்கு உறுப்பினர் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.**
  - பூங்கா கல்வி, விலங்கு பரிமாற்றம், அழிநிலையில் உள்ள விலங்குகளின் இனவிருத்தி செய்வதில் மற்ற இந்திய பூங்காக்களுக்கு ஒரு முன்மாதிரியாக செயல்படுகிறது.
  - மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் அண்ணாவின் பெயர் சூட்டப்பட்டு 1985-ம் ஆண்டு தொடங்கப்பட்டது.
  - இதன் மொத்த பரப்பளவு 602 ஹெக்டர்கள் ஆகும்.

## தேசிய நிகழ்வுகள்

- **நாடு முழுவதும் அமைக்கப்பட உள்ள "ஏகலைவன்" மாதிரிப்பள்ளிகளுக்கு அடிக்கல் நாட்டினார் பிரதமர் மோடி.**
  - "ஏகலைவன் மாதிரிப்பள்ளி" என்பது, நாட்டில் 50 சதவீதம் பட்டியல் பழங்குடியினர் மக்கள் தொகை கொண்ட மற்றும் 20 ஆயிரம் பழங்குடி இனத்தவர் வசிக்கும் ஒவ்வொரு வட்டத்திலும் செயல்பட உள்ள உறைவிட பள்ளியாகும்.
  - நாடு முழுவதும் 462 ஏகலைவன் மாதிரிப் பள்ளிகள் தொடங்கப்பட உள்ளன.
  - அதிகபட்சமாக ஜார்க்கண்ட் மாநிலத்தில் 69 பள்ளிகள் அமைக்கப்பட உள்ளன.

- **நாடு முழுவதும் சிறிய மற்றும் பெரிய அளவிலான உணவு பூங்காக்கள் அமைக்க உலக வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது மத்திய அரசு.**
  - இத்திட்டத்திற்கு ரூ.3,000 கோடி நிதி வழங்க உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.
  - 15-வது இந்திய - அமெரிக்க பொருளாதார மாநாடு டில்லியில் நடைபெற்றது. இம்மாநாட்டில் உணவு பூங்கா அமைப்பதற்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

- **இந்திய பொருளாதார வளர்ச்சி எதிர்பார்த்ததை விட மிகவும் மோசமான நிலையில் உள்ளது என சர்வதேச நிதியம் (ஐஎம்எஃப்)**

**தெரிவித்துள்ளது.**

- 2019-20 -ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் இந்தியாவின் பொரளாதார வளர்ச்சி 5 சதவீதமாக சரிந்துள்ளது என தெரிவித்துள்ளது.
- இருப்பினும், சீனாவை விட உலக அளவில் மிக வேகமாக வளர்ச்சி கண்டு வரும் பொருளாதாரமாக இந்தியா உள்ளது என்றும் தெரிவித்துள்ளது.
- சர்வதேச நிதியத்தின் சிறப்பு பொருளாதார ஆலோசகராக இந்தியாவைச் சேர்ந்த கீதா கோபிநாத் உள்ளார்.

## பொருளாதார செய்திகள்

- **வெங்காயத்தின் குறைந்தபட்ச ஏற்றுமதி விடை டன்னுக்கு 850 டாலராக நிர்ணயித்துள்ளது மத்திய அரசு.**
  - உள்நாட்டில் வெங்காயத்தின் விலை உயர்வை தடுக்கும் வகையில் மத்திய அரசு இந்த நடவடிக்கை எடுத்துள்ளது.
  - இந்தியாவில் வெங்காய மகசூல் ஆண்டுக்கு 1.8 கோடி டன்னாக உள்ளது.
  - இதில் சராசரியாக 15 லட்சம் டன் அளவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது

## விளையாட்டு செய்திகள்

- **உலக மல்யுத்த சாம்பியன் போட்டி கஜகஸ்தானின் நூர்-சுல்தான் நகரில் நடைபெறுகிறது.**
  - இந்த போட்டி 2020 ஒலிம்பிக் போட்டி தகுதிச் சுற்றாகவும் உள்ளது.
  - இந்தியாவின் பஜ்ரங்பூனியா, வினேஷ் போகட் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.